சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 12.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-20 |
| சாட்சியின் பெயர் | : | சிவக்குமார் |
| தந்தை பெயர் | : | துரைபாண்டி |
| கிராமம் | : | தென்னவனேரி |
| தாலுக்கா | : | நாங்குனேரி |
| தொழில் | : | அறிவியல் அலுவலர் |
| வயது | : | 40 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்யப்படுகிறது. இதனால் சாட்சியானவர் சென்னை மாநகர சிட்டி சிவில் நீதிமன்ற காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு சென்னை மாநகர சிட்டி சிவில் நீதிமன்றதில் அசிஸ்டன் ப்ரோகிராமராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான செல்வி. விசாலாட்சி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டி பிரமாணம் செய்து வைத்ததன் பேரில் இவ்வழக்கு சாட்சியம் காணொளி காட்சி மூலம் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் அறிவியல் அலுவலராக சென்னை தடய அறிவியல் துறையில் பணிபுரிந்து வருகிறேன். 16.12.2021 அன்று நான் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணியிலிருந்தபோது, முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து நீதிமன்ற கடித எண் 2347/2021 நாள் 15.12.2021 சி.பி. எண் 69 முதல் 71/2021, குற்ற எண் 873/2021 திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய வழக்கிற்குரிய வழக்கு சொத்துக்களை சரியாக மூடி முத்திரையிடப்பட்டு காவலர் சுதாகர் என்பவர் மூலமாக ஆய்வகத்தில் பெறப்பட்டது. அதற்கு ஆய்வக எண் TAN/BIOL/351 /2021 வழங்கப்பட்டது. பெறப்பட்ட தடய பொருட்கள் பின்வருமாறு

அயிட்டம் 1) முழுவதுமாக கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கிழிந்து கசங்கிய இளம் சிவப்பு நிற முழுக்கை சட்டை -1 - சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 2) முழுவதுமாக கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய வெள்ளை மற்றும் ஊதா நிற ஜீன்ஸ் பேண்ட் ஒன்று -சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 3) முழுவதுமாக கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கிழிந்து கசங்கிய கருப்பு நிற ஷார்ட்ஸ் ஒன்று -சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 4) முழுவதுமாக கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கிழிந்து கசங்கிய சாம்பல் நிறம் மற்றும் நீல நிற முண்டா பனியன் ஒன்று -சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 5) கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய சிறிய கற்கள் மற்றும் தாவர பொருட்கள் கலந்த மண் சிறிதளவு -சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 6) சிறிய கற்கள் மற்றும் தாவர பொருட்கள் கலந்த மண் சிறிதளவு -சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 7) கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கருப்பு ஒரு ஜோடி காலணி -சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 8) கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கருப்பு நிற Vivo Smart Mobile Phone ஒன்று -சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட தடய பொருட்களான 1 முதல் 8 வரையிலான இரசாயன பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டதில் அயிட்டங்கள் 1, 2, 3, 4, 5, 7 மற்றும் 8 இல் இரத்தம் கண்டறியப்பட்டுள்ளது. அயிட்டம் 6 ல் இரத்தம் கண்டறியவில்லை என்று அறிக்கை வழங்கியுள்ளேன். அந்த உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறிப்பு**

மேற்படி இரத்த மாதிரிகளை இரத்த இனம் மற்றும் வகையை கண்டறியும் பொருட்டு துணை இயக்குநர் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த உயிரியல் அறிக்கை 06.01.2022 அன்று காவலர் கவிதா அவர்கள் மூலமாக முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை எந்த இடத்தில் எங்கு வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார் என்ற விபரத்தை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 16.12.2021 ம் தேதி முதல் விசாரணையில் சொன்னபடி சா.பொ.1 முதல் சா.பொ.8 வரையிலான தடயப் பொருட்கள் தங்கள் அலுவலகத்தில் எந்த நேரத்தில் ஒப்படைக்கப்பட்டது என்று விசாரணை அறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் எங்களுடைய அலுவலக கோப்பில் உள்ளது.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் சென்னை மாநகர சிட்டி சிவில் நீதிமன்றதில் அசிஸ்டன் ப்ரோகிராமராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான

செல்வி. விசாலாட்சி அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ஙணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 12.02.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.12 15:29:06 +0530

அமர்வு நீதிபதி,

பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)

வழக்குகளை விசாரிப்பதற்கான

சிறப்பு நீதிமன்றம்,

திருவாரூர்.